විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS
ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය
தலைமுறையொன்றின் பெருமிதம்
Pride of a Generation

මගේ අංකය
எனது இல. } ஓய்வூதிய அறிவுறுத்தல்க்
My No.
கடித இல: 04 / 2023

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2023.04.18
Date

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்கள்.

**<u>MISCO முறைமை மூலம் ஒருங்கிணைந்த சேவைகளில் உள்ள அலுவலர்களின் விவரங்களைப் இற்றைப்படுத்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பில் இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட COM/TRANS/MISCO ஆம் இலக்க 15.03.2023 ஆம் திகதிய கடிதத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. தரவுகளை சேகரித்தல், ஊழியர்களின் விவரங்களை இற்றைப்படுத்தல், வருடாந்த இடமாற்றங்களுக்கான கோரிக்கைகளை சமர்ப்பித்தல் மற்றும் இணைந்த சேவைகளில் உள்ள அலுவலர்கள் தொடர்பான பல செயல்பாடுகளை இயங்கலை முறைமையின் மூலம் மேற்கொள்ளும் நோக்கத்துடன் MISCO மென்பொருளானது ஒருங்கிணைந்த சேவைகள் பிரிவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

03. அதன்படி, தங்கள் அலுவலகங்களில் பணிபுரியும் ஓய்வூதியத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் இணைந்த சேவையில் உள்ள அனைத்து அலுவலர்களின் விவரங்களும் 2023.05.02 ஆம் திகதிக்கு முன்னர் MISCO முறைமையினுள் உட்புகுத்தப்பட வேண்டும் / இற்றைப்படுதப்பட வேண்டுமென்பதுடன் குறிப்பிட்ட விவரங்களைச் உட்புகுத்துவது / இற்றைப்படுத்துவது அந்தந்த அலுவலுர்களின் சொந்தப் பொறுப்பாகும் என்பதை அலுவலுர்களுக்குத் தெரியப்படுத்தவும்.

04. இணைந்த சேவைகளில் உள்ள அலுவலர்களின் அனைத்து எதிர்கால நிர்வாக நடவடிக்கைகளிலும் கணினியில் கிடைக்கும் விவரங்களைப் பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளதால், விவரங்களைச் உட்புகுத்தப்படாத / இற்றைப்படுத்தாத அலுவலுர்களின் உறுதிப்படுத்தல்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் விடுவித்தல்கள் போன்ற நிர்வாக நடவடிக்கைகள் தாமதமாகும் என்பதை அந்தந்த அலுவலர்களுக்கு தெரியப்படுத்தவும்.

මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk

05. மேலும் தகவலுக்கு, பின்வரும் இணைப்புகள் மூலம் MISCO முறைமையினுள் உள்நுழைந்து, கணினியின் உதவி இடைமுகத்தில் கிடைக்கும் பயனர் வழிகாட்டியைப் வாசிக்கவும்.

- LGN பயனர்களுக்கு : **http://10.250.1.112/misco/**
- பிற வலைப்பின்னல்களுடன் இணைப்பிலுள்ள பயனர்களுக்கு: **http://43.224.125.68/misco/**

06. இணைந்த சேவைகளில் உள்ள அலுவலர்களின் நிர்வாகச் செயல்பாடுகளை திறம்பட நடைமுறைப்படுத்துவதில் இந்த முயற்சி வெற்றியடைய தங்கள் அன்பான ஒத்துழைப்பு பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

**ஒப்பம்**
**ஏ. ஜகத் டி டயஸ்**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்**